# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108581

1. District : DVAC | PS: DVAC, H'qtrs Chennai | Year: 2020 | FIR No.: 22 | Date: 22-12-2020
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption [Amendment] Act - 2018 — Sections பிரிவுகள்: 7.
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 19.10.2020 16.00 hrs — Date to : நாள் வரை 22.12.2020 12.00 hrs.
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.12.2020 — Time நேரம் : 16.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.12.2020 — Time நேரம் : 18.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 KMS.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி O/o AE. O&M. [TANGEDCO] KOVILPATHAGAI. AVADI
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D. Sahayadas — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. Devasahayam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Business — (g) Address : முகவரி No: 288, Thalampoo Street. Poompozhil Nagar, Kovil pathagai Chennai - 600062.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. Parameswari, Commercial Inspector, O/o AE. O&M [TANGEDCO] Kovilpathagai - Avadi
2) Th. Guru, Line man, O/o AE. O&M [TANGEDCO] Kovilpathagai - Avadi

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
(No Delay)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

- Enclosed in Seperate Sheet.—

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed N. Ravi Kumar... Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 22/12/2020 | (signature) 22-12-2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 22.12.2020 at 18:30 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் (N. RAVIKUMAR)
Rank: நிலை Inspector of Police No. எண் ……
SIC – V&AC, Chennai

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.22/2020 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு :-**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுப்பிரிவு, காவல் ஆய்வாளர் என்.ரவிகுமார் ஆகிய நான் இன்று 22.12.2020-ம் தேதி மாலை 4 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, சென்னை-62, கோவில்பதாகை, பூம்பொழில் நகர், தாழம்பூ தெரு, எண்.288 என்ற முகவரியில் வசிக்கும் D.சகாயதாஸ் என்பவர், என் அலுவலகம் ஆஜராகி, என்னிடம் எழுத்துபூர்வமான புகார் மனு ஒன்றை அளித்தார். அவர் அளித்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு

அனுப்புநர்

D.சகாயதாஸ்,
த/பெ. தேவசகாயம்,
எண்.288, தாழம்பூ தெரு,
பூம்பொழில் நகர், கோவில்பதாகை
சென்னை-62.

பெறுநர்

உயர்திரு இன்ஸ்பெக்டர் அவர்கள்,
லஞ்ச ஒழிப்புத்துறை,
ஆலந்துார், சென்னை-16.

அய்யா,

நான், எண்.288, தாழம்பூ தெரு, பூம்பொழில் நகர், கோயில்பதாகை, சென்னை-62 என்ற விலாசமிட்ட வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமாக திருவள்ளுர் மாவட்டம், ஆவடி தாலுகா, கோவில்பதாகை கிராமத்தில் சர்வே எண்கள். 544/8 மற்றும் 544/9 ஆகியவற்றில் 2504 சதுர அடி காலி மனை உள்ளது (அதன் முகவரி பிளாட் எண்.1, கிருபா நகர், கோவில்பதாகை). இந்த காலி மனையில் வீடு கட்டுவதற்காக முதல் கட்டமாக தற்காலிகமான மின் இணைப்பு வேண்டி 17.10.2020ந் தேதி உரிய ஆவணங்களுடன் ஆன்லைனில் பதிவு செய்து அதற்குரிய கட்டணமாக ரூ.118/- செலுத்தினேன்.

தொடர்ந்து ஆன்லைனில் பதிவு செய்த ஆவணங்களை அன்றைய தினமே காலை சுமார் 11 மணியளவில் கோவில்பதாகை EB உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று உதவிப் பொறியாளரிடம் ஆவணங்களை அளிப்பதற்காக கேட்டேன். அப்போது உதவிப் பொறியாளர் திருமுல்லைவாயில் அலுவலகத்தில் இருப்பதாக அங்கு தெரிவித்தார்கள். உடனே நான் அன்று காலை சுமார் 11.30 மணியளவில்

திருமுல்லைவாயில் மின்வாரிய அலுவலகத்தில் வைத்து உதவிப்பொறியாளரை சந்தித்து விண்ணப்பத்தை அவரிடம் அளித்து மின் இணைப்பு வழங்க கேட்டேன். அப்போது உதவிப் பொறியாளர் அறிவுறுத்தலின் பேரில் ரூ.80/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் பிரமான பத்திரம் தயார் செய்து கையொப்பமிட்டு அவரிடமே சமர்ப்பித்தேன். நான் சமர்ப்பித்த விண்ணபத்தில் அன்றே உதவி பொறியாளர் கையொப்பம் செய்து பின்னர் தமிழ்நாடு மின்வாரிய கோவில்பதாகை அலுவலகத்தில் வணிக ஆய்வாளரிடம் கொடுக்குமாறு கூறினார்.

அதன்பேரில் நானும் அன்றைய தினமே உதவி பொறியாளர் அவர்களின் அறிவுரைப்படி எனது விண்ணப்பம் மற்றும் இதர ஆவணங்களை மதியம் சுமார் 1 மணியளவில் அதே அலுவலகத்தில் வணிக ஆய்வாளரிடம் கொடுத்தேன். அப்போது வணிக ஆய்வாளரின் பெயர் பரமேஸ்வரி என்று அருகில் இருந்தவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். பின்னர் வணிக ஆய்வாளரும் எனது காலிமனை அமைந்துள்ள இடம் குறித்து விசாரித்து தெரிந்து கொண்டார்கள். அதனை தொடர்ந்து மறுநாள் 19.10.2020ந் தேதி மாலை சுமார் 4 மணியளவில் வணிக ஆய்வாளர் மற்றும் குரு என்ற பெயரில் அழைக்கப்படும் லைன் மேன் ஆகிய இருவரும் எனக்கு சொந்தமான காலிமனையை ஆய்வு செய்தார்கள் (Site Inspection). ஆய்வின் போது எனது காலிமனையிலேயே வைத்து வணிக ஆய்வாளர் ரூ.50,000/- தனியாக கொடுத்தால் உங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்து உதவுவதாக தெரிவித்தார். அப்போது எனது நண்பர் திரு.செல்வராஜும் உடனிருந்தார். நான் வணிக ஆய்வாளரிடம் அவ்வளவு பணம் என்னிடம் இல்லையென்று கூறிவிட்டேன். பின்னர் ஒரு வாரத்தில் எனது விண்ணபத்தை நிராகரித்து விட்டதாக தெரிந்து கொண்டேன்.

தொடர்ந்து கோவில்பதாகை மின்வாரிய அலுவலகத்தில் கேட்டபோது நிராகரித்தற்கான காரணம் ஏதும் கூறவில்லை. மீண்டும் விண்ணப்பிக்கச் சொன்னார்கள். அதன்பேரில் நான் கடந்த 24.11.2020ம் தேதி கோவில்பதாகை மின்வாரிய அலுவலகத்திற்கு அருகே உள்ள e-சேவை மையத்தின் மூலம் மீண்டும் மின் இணைப்பு வேண்டி இரண்டாம் முறையாக பதிவு செய்து கட்டணமும் செலுத்தினேன். பின்னர் நான் மீண்டும் வணிக ஆய்வாளரை அவரது அலுவலகத்தில் 24.11.2020ந் தேதி காலை சுமார் 11 மணியளவில் சந்தித்து மின் இணைப்பு வேண்டி மீண்டும் பதிவு செய்த விவரத்தை தெரிவித்து விண்ணப்ப எண் தொடர்பான ரசீதை காண்பித்து எனது காலிமனைக்கு மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். அப்போது வணிக ஆய்வாளர் ஏற்கனவே தான் கேட்ட பணம் ரூ.50,000/- கொடுத்தால்தான் மின் இணைப்பு கொடுக்க முடியும் என்று கண்டிப்புடன் கூறினார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். இந்த விண்ணப்பமும் எந்த காரணமும் இன்றி ரத்து

செய்யப்பட்டு உள்ள விவரம் எனது செல்போனுக்கு வந்த குறுங்செய்தி மூலம் தெரிந்து கொண்டேன்.

மூன்றாம் முறையாக நான் மீண்டும் 11.12.2020ந்தேதி அதே எனது காலி மனைக்கு தற்காலிக மின்இணைப்பு வேண்டி ஆண்லைனில் ரூ.118/- செலுத்தி பதிவு செய்தேன். பின்னர் இது தொடர்பாக கடந்த 14.12.2020ந்தேதி காலை 10.30 மணியளவில் கோவில்பதாகையில் உள்ள தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தில் வணிக ஆய்வாளரை சந்தித்து விவரத்தை கூறியபோது அவர் ரூ.50,000/- தனியாக பணம் தந்தால் மட்டுமே இணைப்பு வழங்க முடியும் என்றும் பணத்தை லைன்மேன் குரு என்பவரை பார்த்து கொடுக்கும்படி கூறினார். நானும் அதன்படி அன்றைய தினமே காலை 11.30 மணிக்கு லைன் மேன் குருவை கோவில்பதாகை பைபிள் காலேஜ் அருகே சந்தித்து வணிக ஆய்வாளர் சந்திக்க சொன்ன விவரத்தை தெரிவித்தேன். அப்போது அவர் வணிக ஆய்வாளர் கேட்டது போலவே ரூ.50,000/- பணம் தனியாக தர வேண்டும் என்றும், அப்போது தான் AD வரைக்கும் File ஐ வைத்து Sanction பெற முடியும் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். நான் இந்த தொகை அதிகமாக உள்ளதே என்று கேட்டதற்கு முதலில் ரூ.30,000/-ம், வேலையை தொடங்கிய பின் மீதி பணத்தையும் தருமாறு கேட்டார். என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் பணம் கொடுக்கவில்லை என்றால் வேலை நடக்காது என்றும் முன்பு நடந்தது போலவே விண்ணப்பத்தை ரத்து செய்துவிடுவார்கள் என்று எச்சரித்தார். பணத்துடன் வந்தால் வேலையை முடித்து தருவதாக கூறினார்.

நான் எனது விண்ணப்பத்தின் நிலையை ஆன்லைனில் பார்த்தபோது ரூ.2,200/- கட்டணமாக செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன்படி இன்று 22.12.2020ம் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் ரூ.2,200/- கட்டணத்தை ஆன்லைனிலேயே செலுத்திவிட்டேன். இந்த விவரத்தை இன்று 22.12.2020 பகல் சுமார் 12 மணியளவில் லைன்மேனை அவரது அலுவலகத்திற்கு வெளியே சந்தித்து கட்டணம் செலுத்திய விவரத்தை தெரிவத்தேன். அப்போது அவர் கட்டணம் செலுத்துவதற்கும் அவர் கேட்ட பணம் ரூ.50,000/- த்திற்கும் சம்பந்தமில்லை என்றும் பணத்தை கொடுத்துவிட்டு வேலையை முடித்து செல்லுமாறு கூறினார். என்னிடம் லஞ்சம் கேட்ட வணிக ஆய்வாளர் மற்றும் லைன் மேன் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் நான் லஞ்ச ஒழிப்புத்துறை மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு தருகிறேன் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

இப்படிக்கு
Sd/-xxxxx
(D.சகாயதாஸ்)

Sir, Received the complaint today (22.12.2020) at 16.00 hrs. and the same was communicated to my higher officers and upon getting permission, a quiet and discrete verification was made over the complaint. After satisfaction and getting permission from the higher authorities, a case in V&AC Hqrs.Cr.No.22/2020 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 was registerted today 22.12.2020 at about 17.00 hrs. and taken up for investigation.

Sd/-xxxxx
22.12.2020
Inspector of Police
V&AC, SIC
Chennai.

22-12-2020
(N.RAVIKUMAR)

INSPECTOR OF POLICE
Special Investigation Cell
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.